2005 ஏப்ரல் 5]

செயலுக்கு வரும். [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53* (*5*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

99. *25–1–2005* ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (*1*) (வவ)/*6* (e–*1*)/*2005* ஆம் எண்ணிட்ட வணிக வரித் துறையின் அறிவிக்கையை ரத்துச் செய்தும், இந்தோ–பர்மா பெட்ரோலியம் கம்பெனி லிமிடெட் நிறுவனம், மாநிலங்களுக்கிடையே மேற்கொள்ளும் வர்த்தக அல்லது வணிக நடைமுறையில் செய்யப்படும் விற்பனை அல்லது கொள்முதலின் நேரடிப் பலன் நீங்கலான, முதலாவது விவர அட்டவணையில் பகுதி D, பகுதி E, பகுதி F மற்றும் பகுதி G-இல் குறிப்பிட்ட சில இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைக் கொள்முதல் செய்து, அவற்றை மாநிலத்திற்கு வெளியே அனுப்புவதற்கு பொது விற்பனை வரிச் சட்டத்தின் *7*–A பிரிவின்கீழ் செலுத்தத்தக்க வரியைக் குறைத்தும், இது *12–12–1990* ஆம் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும் என்று வணிக வரித் துறையின் *14–2–2005* ஆம் நாளிட்ட *13* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53* (*5*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

100. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் *2003–2004* ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. [*1995* ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *4/1996*) *109* (*4*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

190. மானியக் கோரிக்கை எண் *10*–வணிக வரித் துறை–வணிக வரிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2005–2006*. (தமிழ், ஆங்கிலம்)

191. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை. (*2003–2005*)

192. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *50* வரை).